R 4034 (page 229)

# ராஜாவின் பிரசன்னத்தினுள்ளே

# IN THE PRESENCE OF THE KING

ராஜாவின் பிரசன்னத்தினுள்ளே நாமுள்ளோம் என்றே எண்ணம் கொள்ளல் வேண்டும்,
ஒவ்வொரு நொடிப்பொழுதிலும், ஒவ்வொருசிறு செயல்களிலும் ராஜாவின் பிரசன்ன
எண்ணம் உள்ள போதில், எத்தனை மதிப்புறும், எத்தனை கனம்பெறும்?
எண்ணத்தில் நாம் கொள்ளும் சிந்தை ராஜாவுக்குத் தெரியும் என்கின்ற போதில்
எவ்வளவு கவனம்கொண்டே யோசிப்போம்?
எத்தனை ஆசீர்வாதம் அதில்தானேவந்து சேரும்?
நம் விசுவாச சோதனைக்கு ஒரு சிறுவார்த்தை போதுமன்றோ?
மனக்காயத்தை உண்டாக்கி விசுவாசத்தை சோதிக்கும்: இராஜ்ஜியத்தின் உள்ளே, நாம்
இருக்கிறோம் எனும் சிந்தை எத்தனை வேகமாய் மனக்காயத்தை ஆற்றிவிடும்?
வாழ்க்கையின் பாடலைப்பாடுதலே மிகக்கடினம் என்றே மனம் தடுமாறி நிற்கின்ற
போதினில் பாதை இருளாய் தோன்றிடும் பொழுதும் இராஜாவின் அருகினில் இன்னும்
கிட்டச்சேர்க்கும், இரவோ,
பகலாய்வேகமாய் மாறும், ராஜ்ஜியம் மலரும், ஆசீர்வாதம் தங்கும்.